# புலிகளைசந்தித்துபேசஹமீத் இன்றுயாழ்.வருகிறர்
## 6-வது சுற்று சந்திப்பில் முக்கிய இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் நீதியமைச்சர் ஹமீத்துக்கும் இடையே ஒத்திவைக்கப்பட்டிருந்தபேச்சுவார்த்தை இன்று காலை யாழ்ப்பாணத்தில் இடம் பெறுகின்றது. பேச்சுவாரத்தையில் கலந்து கொள்வதற்காக அமைச்சர் ஹமீத இன்று காலை யாழ். வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பேச்சுவார்த்தையில் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா), விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் திரு. யோகரட்ணம் யோகி ஆகியோர் கலந்து கொள்ளுகிறர்கள். (8-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 | வைகாசி: 08 | ஷவ்வால் பிறை: 26 | இதழ்: 99

யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 22-05-1990

நிதர்சனம்

## உள்ளூர் கலைஞர்களுக்கு விரைவில் வாய்ப்பளிக்கும்

(யாழ்ப்பாணம்)

நிதர்சனம் பெரிய அளவில் எமது மண்ணின் கலைஞர்களுக்கு வாய்ப்புக்களையும் வசதிகளையும் வெகுவிரைவில் அளிக்கவிருக்கிறது என்று தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கலை கலாசாரப் பொறுப்பாளர் திரு. புதுவை (8ம் பக்கம் பார்க்க)

# வடக்கு-கிழக்கில் நேற்று ஹர்த்தால் பூரண வெற்றி!

## அதிசயக் குழந்தை

(ஜாகர்த்தா)

எத்தகைய கேள்விகளை கேட்டாலும் கணணி வேகத்தில் உடனுக்குடன் பதிலளிக்கும் ஒரு வயதுக் குழந்தை அனைவரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

(8-ம் பக்கம் பார்க்க)

## வாகனங்கள் ஓடவில்லை!
### கடைகள் பூட்டு! சந்தை கூடவில்லை!!

(யாழ்ப்பாணம்)

மலையகம் வாழ் தமிழ் மக்களுக்கு எதிரான சிறிலங்கா அரசின் இராணுவ அடக்கு முறையைக் கண்டித்து வடக்குக் கிழக்கு மாகாணம் முழுவதும் நேற்றுப் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனுல் வடக்கு கிழக்கு பகுதிகள் நேற்றுமுற்றாக ஸ்தம்பிதமடைந்தன. மினிபஸ்கள் போக்குவரத்துச் சேவை, பஸ்கள், ரயில்கள் மற்றும் வாகனங்கள் ஓடவில்லை. அலுவலகங்கள் இயங்க வில்லை. கடைகள் பூட்டப்பட்டிருந்தன. சந்தைகள் கூட வில்லை. வீதிகள் யாவும் மக்கள் நடமாட்டமில்லாது வெறிச் சோடிக் காணப்பட்டன. (8-ம் பக்கம் பார்க்க)

## இன்று லோங் அடிகளார் நினைவு முத்திரை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வண. பிதா ரி. எம். எவ். லோங் அடிகளாரைக் கௌரவிக்கும் முகமாக, இலங்கை அரசாங்கத்தால் இன்று வெளியிடப்படும் ஞாபகார்த்த முத்திரை வெளியீட்டு விழாவின் நிகழ்ச்சிகள் வருமாறு:

காலை 7-15-க்கு, யாழ். பொதுநூல் நிலைய வளாகத்திலுள்ள பிதா லோங் அடிகளாரின் சிலைக்கு மலர்மாலை அணிவித்தல்.



(8-ம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பு அம்பாறைப் பகுதியில்

## இடம்பெற்ற ஹர்த்தால் வெற்றியளித்தது!

\- விசு

(மட்டக்களப்பு)

மலையக மக்களுக்கு ஆதரவாக நடந்த பூரண ஹர்த்தால் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் வெற்றியளித்திருப்பதாக மட்டக்களப்பு, அம்பாறை விடுதலைப் புலிகளின் மாவட்ட அமைப்பாளர் திரு. விசு தெரிவித்துள்ளார்.

கடைகள் யாவும் பூட்டப்பட்டிருந்தன. வாகனப் போக்குவரத்துக்கள் எதுவும் இடம் பெறவில்லை. இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்கள் எதுவும் ஓடவில்லை.

கொழும்பிலிருந்து மட்டக்களப்பை நோக்கி வந்த ரயில் பொலநறுவையில் தரித்து, மீண்டும் அங்கிருந்து கொழும்புக்கு பயணமாகின, என தெரியவருகிறது. (121)

வடமராட்சிகிழக்கில்

## ஆறு மைல் நீளமான பாதை வேலைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள கேவில் சந்தியிலிருந்து சுண்டிக்குளம் வரையிலான பிரதேசத்தை இணைக்கும் ஆறுமைல் நீளமுடைய வீதியை உருவாக்கும் பணியை யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

26,000 பொதுமக்களின் உயிர்த் தியாகம்

## எமது விடுதலை இயக்கத்தை மக்கள் சக்தியாக வளர்த்திருக்கிறது

\- திருக்கடலூரில் யோகி

(திருகோணமலை)

"சுமார் 26,000 பொதுமக்கள் தமது உயிர்களை அர்ப்பணித்து, எமது விடுதலை இயக்கத்தை மாபெரும் மக்கள் சக்தியாக வளர்த்துள்ளீர்கள் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடமுடி (8-ம் பக்கம் பார்க்க

## ரயில் சேவைகள்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினமிரவு கொழும்பிலிருந்து காங்கேசன் துறைக்கு புறப்பட்ட இரவு தபால் ரயில் நேற்றுக்காலை சுமார் ஆறுமணியளவில் காங்கேசன்துறையை வந்தடைந்தது.

நேற்றுக் காலை கொழும்பிலிருந்து புறப்பட்ட யாழ் தேவி . யாழ்ப்பாணம் வந்து (8-ம் பக்கம் பார்க்க)

## ஓய்வூதியக் கொடுப்பனவுகளை துரிதப்படுத்துமாறு அமைச்சர் உத்தரவு

(கொழும்பு)

ஓய்வூதியக் கொடுப்பனவுகள் துரிதப்படுத்தப்படும். பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாணசபைகள் அமைச்சர் திரு. பெஸ்ரஸ் பெரேரா ஓய்வூதியப் பணிப்பாளருக்கு விடுதத உத்தரவில், அரசாங்கத்துறை ஊழியர்கள் ஓய்வு பெற்ற மூன்று மாத காலத்துக்குள் அவர்களுக்கு ஓய்வூதியத்தை வழங்க துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணித்திருக்கிறர்.

விதவைகள் அனுதைகள் ஆகியோருக்கான ஓய்வூதியக் கொடுப்பனவும் துரிதப்படுத்தப்பட வேண்டுமென்று அமைச்சர் தெரிவித்திருக்கிறர்.

அரசாங்கத்துறை ஊழியர்களுக்கான 'ஓய்வூதியக் கொடுப்பனவுகள் தாமதங்கள் பற்றிய முறைப்பாடுகள் பொதுநிர்வாக அமைச்சுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் பெஸ்ரஸ் பெரேரா செய்த பணிப்பில் இதற்கு உடனடி (8-ம் பக்கம் பார்க்க)

திருகோணமலையை சிங்கள அரசு

## தன் சதி வலைக்குள் வீழ்த்த திட்டமிட்டிருக்கிறது

\- கவிஞர் வாஞ்சிநாதன்

(திருகோணமலை)

"காலங்காலமாக இந்த திருகோணமலை மாவட்டம் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமாகத்தான் இருந்து வந்திருக்கிறது.

குளக்கோட்டான் என்ற பழம்பெரும் அரசனுல் கட்டுவிக்கப்பட்ட கந்தளாய்க் குளமும், தம்பலகாமம் கோணேஸ்வரகோயிலும் கங்குவேலி சிவன்கோயிலும்... திருகோணமலையைப்பற்றி திருஞானசம்தரால் பாடப்பட்ட திருக்கோணமலைப் பதிகமும், இராவணனுல் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படும் கன்னியா (8ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை (புதிய இறக்குமதி) விற்பனைக்குண்டு. பிள்ளையார், 250, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி-3858]

உற்சவ தேவைக்குரிய விநாயகர், துர்க்கை அம்மன், முருகன் விக்கிரகங்கள் கோவில் பட்டுக்குடை, மணிகள், கொடிக் கம்பங்கள் விற்பனைக்குண்டு. பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-3681)

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

Prima Lohmann சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் கறுப்பு, சிவப்பு சேவற்குஞ்சுகள் Golden Comet, HylineBlack, பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன்கிழமைகளில் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்டர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி 3838)

### தவறிவிட்டது

மாதகல் நுணசை மூர்த்தி முருகன் கோவில் தேர்த்திருவிழா (8-05-90)ல்நடைபெற்றபோது கோவில் அருகில் தீக்குளிப்பு வைபவவேளையில் தா. அன்னமேரி என்பவரின் தாலிக்கொடி காணமற்போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். கீ. தாவீதுராசா, நுணசை வீதி, மாதகல். (சி 3885)

## முதலாண்டு விழா

(உடுவில்)

உடுவில் பூரணி பெண்கள் நிலையத்தின் முதலாவது ஆண்டு பூர்த்திவிழா இம்மாதம் 26-ம் திகதி மாலை நடைபெறும். இவ்விழாவை ஒட்டி கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். (109)

## தென்மராட்சிக்கு அரச அதிபர் விஜயம்

(தென்மராட்சி)

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிரட் உத்தியோகபூர்வமான விஜயம் ஒன்றை தென்மராட்சிப் பகுதியில் மேற்கொண்டார்.

சாவகச்சேரி உதவி அரச அதிபர் திரு. பு. சுந்தரம்பிள்ளையுடன் சென்று சாவகச்சேரி உதவி அரச அதிபர் பணிமனை, கொடிகாமம் நடமாடும் உதவி அரச அதிபர் செயலகம் மிருசுவில் படித்த பெண்கள் குடியேற்றம் என்பவற்றைப் பார்வையிட்டார். [61]

## வரைதல் போட்டி

(பண்டத்தரிப்பு)

கொழும்பிலுள்ள தேசிய வை. எம். சி. ஏ. நிறுவனம் சிறுவர் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நடாத்திய சித்திரம் தீட்டும் போட்டி பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

இந்தச் சித்திரம் தீட்டும் போட்டியில் பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. யினர் நடாத்தும் சிறுவர் பாடசாலையைச்சேர்ந்த 35மாணவ, மாணவிகள் பங்குபற்றினார்கள். (72)

## 28ம் திகதி கொடியேற்றம்

(மன்னார்)

திருக்கேதீஸ்வரததில் இம்மாதம் 28ம் திகதி கொடியேற்றமும் திருவிழாக்களும் ஆரம்பமாகும். 5ம் திகதி தேர் திருவிழாவும் 6ம் திகதி தீர்த்தமும் இடம்பெறும். இதனை முன்னிட்டு திருக்கேதீஸ்வரத்தில் சுந்தரர்மடம் திருத்தம் செய்யப்படுகின்றது. தேர்வரும் வீதியும் திருத்தப்படுகின்றது. அடியார்கள் தங்குமிடமும் திருத்தவேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன.

## மின்சாரநிலையம்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியில் கல்லூரித் தேவைகளுக்காக தனியான மின்சார நிலையமொன்று நிறுவப்பட்டுள்ளது. விரைவில் இந்த நிலையம் திறந்துவைக்கப் படவிருப்பதாக கல்லூரி அதிபர் கலாநிதி எஸ். ஜெபநேசன் தெரிவித்தார். (72)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## "இலட்சியமே இறுதி மூச்சு" — பாப்பா

(நாவற்குழி)

"எந்த இலட்சியத்திற்காக எமது போராட்டத்தை ஆரம்பித்தோமோ அந்த இலட்சியத்திற்காக எமது இறுதி மூச்சுவரை போராடுவோம். 1357 போராளிகளையும், இருபத்து ஐயாயிரம் பொதுமக்களையும் இழந்த நாம் பல இன்னல்களின் மத்தியிலும் எமது தலைவரின் பாதையில் உறுதியாக இருந்து எமது இலட்சியத்தை வென்றெடுப்போம்" என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பா இயக்கச்சி அ. த. க. பாடசாலையில் 'ஒரு கிளி புலியாகிறது' என்ற நாடகம் 19-வது முறையாக மேடையேறிய போது கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "ஆணுக்கு நிகர் பெண் என்ற நிலையை தற்போதுள்ள பெண் போராளிகளை உருவாக்கி அதை உலகிற்கு உணர்த்தியவரும் எமது தலைவரே" என்றார்.

பளைப் பொறுப்பாளர் திரு. திரு. செல்வராசா பேசுகையில், 'இருபதாம் நூற்றுண்டில் மேலைத்தேச கலை கலாசார மோகத்தினுல் எமது கலை கலாசாரம் பின்தங்கிய நிலையில் உள்ளது ஆகையால் எமது கடந்த கால வரலாற்றைப் பிரதிபலிக்கும் வகையிலும், தமிழனின் தன்மான உணர்வுகளை வளர்க்கும்விதத்திலும், போராட்டத் தெளிவை ஏற்படுத்தும்வகையிலும் எமது கலை, கலாசாரம் அமையவேண்டும்" என்றார்.

தென்மராட்சிப் பொறுப்பாளர் தினேஸின் தந்தை பொன். தில்லைநாயகம் பேசுகையில், மக்களே விழிப்பாயிருந்து போராட்டத்தில் பங்கு பற்றுங்கள், உண்மை நிலையை உணருங்கள்', என்றார். (107)

## 15ம் ஆண்டு நினைவஞ்சலி



**டாக்டர் வில்லியம் எஸ். சோமசுந்தரம்**

(விலி - சோமா)

"சீவியத்தில் நேசித்தீர் எம்மை
மரணத்திலும் மறவோம் உம்மை"

அன்பின் மனைவி மங்களம், பிள்ளைகள்;
Dr. சுருஜ், ஸ்ரீராஜ், சுபராஜ், டக்ஷாயினி,
மருமகள் வனே, பேரன் விலிஷான்.

(சி 3884)

## நாளை மஞ்சம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் கோவில் மஞ்சத் திருவிழா நாளை சிறப்பாக நடைபெறவுள்ளது.

மஞ்சத் திருவிழாவினையொட்டி திரு. க. சிவராமலிங்கம் 'வீடும் வேண்டாவிறலினர்' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் தலைமையில் நடைபெறவுள்ள பட்டிமன்றத்தில் கற்போர்கள் மனதை பெரிதும் கலங்கச் செய்வது வாலியின் வீழ்ச்சியே" என்னும் தலைப்பில் திருவாளர்கள் புலவர் ஈழத்துச் சிவானந்தன், சோ. பத்மநாதன், சிவதணிகாசலம், தி. திருநந்தகுமார் ஆகியோரும், இராவணன் வீழ்ச்சியே என்னும் தலைப்பில் திருவாளர்கள் க. சிவராமலிங்கம், ஏ. ரி. பொன்னுத்துரை, க. நாகேஸ்வரன். த. சிவகுமாரன் ஆகியோரும் வாதிடுவார்கள்.

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் க. புவனேந்திரன்**

மலர்வு : 21-09-1946 உதிர்வு : 22-05-1988
ஆண்டுத் திதி : 22-05-1990

அப்பா நாம் உமை இழந்து
ஆண்டு இரண்டு மறைந்ததையா
ஆயிரம் ஆண்டுகள் போனாலும்
எம்துயரம் எமைவிட்டுப் போகாது
உங்கள் நினைவில் வாழ்கின்றோம்
உங்களை நிதமும் துதிக்கின்றோம்
உங்கள் ஆன்மா சாந்திபெற
என்றும் இறைவனை வேண்டுகிறோம்.

அன்புமனைவி பிள்ளைகள், அம்மா, சுற்றத்தார்.

35/2, சிவன் பண்ணை றோட்,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(சி 3887)


## ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம்

பாலர் பாடசாலை கட்டிட நிதிக்காக நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள்:

| 1-ம் பரிசு | 2-ம் பரிசு | 3-ம் பரிசு |
|---|---|---|
| 1724 | 1608 | 1341 |

பத்து ஆறுதல் பரிசிற்குரிய இலக்கங்கள் பின்வருமாறு;

| 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு | 4ம் பரிசு | 5ம் பரிசு |
|---|---|---|---|---|
| 0775 | 1937 | 1682 | 0917 | 1967 |
| 6ம் பரிசு | 7ம் பரிசு | 8ம் பரிசு | 9ம் பரிசு | 10ம் பரிசு |
| 0172 | 0914 | 1784 | 1007 | 0069 |

பரிசுக்குரியவர்கள் நிலைய நிர்வாகிகளுடன் பின்வரும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும்.

**ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம்,**
தச்சன்தோப்பு, கைதடி.

(ஏ-757)

## அதிர்ஷ்ட லாபச் சீட்டு

கடந்த 09 - 05 - 1990இல் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டிழுப்பு சில தவறுகளின் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.

**இச்சீட்டிழுப்பு மீண்டும்**
**[இன்று] 22 - 05 - 1990**
**செவ்வாய்க்கிழமை**
**பிற்பகல் 4-30 மணிக்கு**

நாயன்மார்கட்டு இராமநாதன் வீதியில் உள்ள ஸ்ரீ துர்க்கை அம்பாள் தேவஸ்தான முன்றலில் அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

இத்துடன் இசை நிகழ்ச்சிகளும் நடைபெறும். பொதுமக்களை இந்நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

**EUROPE CHINA HOTEL,**
**89, 2-nd Cross Street,**
**JAFFNA.**

(சி-3886)

### மணிவாக்கு

''கல்வியைத் திருடர் களவாட முடியாது. அது கொடுக்கக் கொடுக்க அதிகரிக்கும். அது என்றும் அழியாதது''.

—பர்த்ருஹரி நீதி

## நமது நோக்கு

### லோங் அடிகளுக்கு முத்திரை அவர் புகழ் வாழ்க!

இன்று தேசிய வீரர் தினம். ஐரிஸ் நாட்டிற் பிறந்து எமது பகுதியிலே சேவையாற்றிய வண. பிதா லோங் அடிகளார் தேசிய வீரராகக் கணிக்கப்பட்டுள்ளார்.

நினைவு முத்திரை வெளியிடப்பட்டுக் கௌரவிக்கப் படவுள்ளார்.

நாற்பது ஆண்டுகளாக ஆசிரியராக, அதிபராக புனித பத்திரிசியார் கல்லூரியிற் சேவையாற்றியவர்.

அக்கல்லூரியின் குறிக்கோள் வாசகமான ''இறை பற்றும் உழைப்பும்'' (Fide et Labore) இறுதி மூச்சு வரை அவரது தாரகமந்திரமாக விளங்கியிருக்கின்றது.

'கார்ணிவல்' என்ற களியாட்ட விழாவை யாழ்ப்பாணத்திற் புகுத்தி, அதன் மூலம் பணம் திரட்டிப் பாடசாலைக் கட்டடங்களை உருவாக்கிய பெருமை அவரைச் சார்ந்தது.

பலாலியிலிருந்த விமானப்படைக்குரித்தான விமானத் தளத்தைப் பொதுவிமானத் தளமாக்க அடிகோலிய பெருமகனாக விளங்கியிருக்கிறார்;

எமது பகுதியின் கல்வி வளர்ச்சியில் அவர் காட்டிய அக்கறை என்றும் நினைவிலிருக்க வேண்டியது. அரசியல் தலைவர்களும், கல்விமான்களும் அவரது ஆலோசனையை அவ்வப்போது பெறத் தவறவில்லை.

அகில இலங்கை அதிபர்கள் சங்கத் தலைவராகவும் பணிபுரிந்த பெருமை அவருக்குண்டு.

கல்வியை வளர்க்க நூலகம் ஒன்றின் அவசியத்தை உணர்ந்தவர் அவர். யாழ். பொது நூலகத்தை உருவாக்க வித்திட்டவர்களில் அவரும் ஒருவர்.

நூலகக் கட்டடத்திற்காக வெளிநாடுகளில் இவர் எப்படி நிதி சேர்த்தார்? 'தொப்பி மூலம் யாசகம் செய்தல்' (Hat Collection) என்ற வழிமுறையைக் கடைப்பிடித்திருக்கிறார்.

ஐரிஸ் பெருமகனாராக இருந்தபோதும், வாழ்ந்த மண்ணின் பெருமையை நிலைநாட்டச் செய்த தொண்டுகள் தான் எத்தனை!

சமயப் பணியிலே புதுமைகளைப் புகுத்தியது எவ்வாறு?

யேசுபெருமானின் திருப்பாடற்காட்சிகளைப் பொம்மலாட்டம் மூலம் மேடையேற்றுவது தொன்றுதொட்டு வந்த வழக்கம். இதனை மாற்றி நடிகர்கள் மூலம் நடிப்பித்திருக்கிறார்.

ஆன்மீகவாழ்வின் மலர்ச்சிக்கு அடிநாதமாக விளங்கியிருக்கிறார்.

மாணாக்கர் சீருடை போன்ற ஒழுங்கு முறைகளைப் புகுத்திப் பெயர் பெற்றவர். ஒழுங்கு உதயமாகும் இடமே ஒழுக்கமாகும் என்பது அவர் நமக்கு விட்டுச் சென்ற நற்போதனை.

தமிழ்மொழி, கலை, கலாசார வளர்ச்சியில் அவர் அக்கறை காட்டியவர். இந்த மண்ணின் கலைஞர்களைக் கௌரவித்துப் போற்றியிருக்கிறார்.

அறிவுச் சுடராக-பெருந்தீபமாக - விளங்கிய லோங் அடிகளார், பேராசிரியர் மயில்வாகனம் போன்ற ஆயிரக்கணக்கான அறிவுத்தீபங்களை ஏற்றிவைத்தார்.

அடிகளார் பெற்ற முத்திரை அறிஞர்களை அரசு கௌரவிக்கின்றது என்பதற்குச் சான்று.

(இன்று சுதுமலை புவனேஸ்வரியம்மை கொடியேற்றம்)

### அன்னை புவனேஸ்வரியே

கன்னல் கதலியொடு செந்நெற் களனிமிகும்
வன்னச் சுதுமலையில் வாழ்வுகொண்டு- மின்னுமுயர்
அன்னைபுவ னேஸ்வரியே! அல்லலுறும் எங்களுக்கு
நின்னருளைச் செய்வாய் நிதம்.

ஃ ஃ

நற்சுது மலையில் வந்து
நயந்தெழுந் தருளி மக்கட்
கற்புத மாக நாளும்
அருளினை யள்ளி ஈயும்
அற்புடைத் தாயே! எங்கள்
புவனஈஸ் வரியே, அம்மா!
நற்பதம் அடியோம் எய்த
நன்கருள் பாலிப் பாயே!

—வெண்பாமணி முருகசூரியன்

# கடத்தல் முயற்சி முறியடிப்பு

(கொழும்பு)

1989ம் ஆண்டு மட்டும் கட்டுநாயக்கா விமான நிலையத்தினூடாக 40 தங்க கடத்தல் முயற்சிகளும் 60 வெளிநாட்டு நாணயக் கடத்தல் முயற்சிகளும் முறியடிக்கப்பட்டன என சுங்கப்பகுதி பணிப்பாளர் அதிபதி எல். ஏ. லியனகம தெரிவித்துள்ளார். இந்த ஆண்டு முதல் மூன்று மாதங்களில் மாத்திரம், 20தங்கக் கடத்தல் 'முயற்சிகளும் 35 நாணயக் கடத்தல் முயற்சிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. என்று அவர் மேலும் கூறினார்.

மோசடிகள் பற்றி தகவல் தெரிவிப்பவர்களுக்கும், மோசடிகளை கண்டுபிடிக்கும் அதிகாரிகளுக்கும் பிடிக்கப்படும் பொருட்களின் ஒரு குறிப்பிட்ட சதவீதம் பரிசாக பெற்றுக்கொள்ள உரிமையுண்டு என்று சுங்க அதிபதி தெரிவித்தார்.

### இரத்தினபுரியில் செஞ்சிலுவைசங்க கிளைச் சங்கம்

(கொழும்பு)

இலங்கை செஞ்சிலுவை சங்கம் இன்று 22-ம் திகதி இரத்தினபுரி டெனிஸ் கழகத்தில் செஞ்சிலுவைக் கிளைச் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்யவுள்ளது.

### விக்கிரகம் பிரதிஷ்டை

(மட்டுவில்)

மீசாலை வெள்ளைமாவடி அருள்மிகு திருநீலகண்ட பிள்ளையாளர் ஆலயத்தில், சந்தான கோபாலகிருஷ்ணன் விக்கிரகம் பரிவார மூர்த்தியாக பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது.

ஜூன் மாதம் 3-ம் திகதி வேதாகம சோதிடபூஷணம் சிவாச்சார்யர் திலகம் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள் பிரதம சிவாச்சாரியராக இருந்து இப்பரிவாரமூர்த்தியைப் பிரதிஷ்டை செய்து வைப்பார். இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் அனைத்தும் 2-ம் திகதி ஆரம்பமாகும். (82)

### விசேட பொதுக்கூட்டம்

(பண்டத்தரிப்பு)

சென்னை கிறிஸ்தவக் கல்லூரி பழைய மாணவர் சங்க யாழ்ப்பாணக்கிளையின் விசேட பொதுக் கூட்டமொன்று இன்று 22ம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை சுண்டுக்குளி சைனீஸ் றெஸ்ரோறண்டில் நடைபெறவுள்ளது.

தற்போது யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள சென்னை கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் வண. டாக்டர் பிரான்சிஸ் சௌந்தரராஜுக்கும். அவரது பாரியாருக்கும் இக்கூட்டத்தில் வரவேற்புபசாரம் அளிக்கப்படவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. ஆர். ராஜன் கதிர்காமர் செய்துள்ளார். (72)

## கள்ளக்கடத்தலைத் தடுக்க சட்ட விதிகளிலுள்ள குறைபாடுகள் நீக்கப்படும்

(கொழும்பு)

கள்ளக்கடத்தலையும் ஏனைய சட்டவிரோத நடவடிக்கைகளையும் தடுக்கும் விதத்தில் சட்டவிதிகளிலுள்ள குறைபாடுகளை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா வலியுறுத்திக் கூறியுள்ளார்.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலுள்ள குடிவரவு குடியகல்வு திணைக்களம், எயர் லங்கா நிறுவனம், பொலிஸ் பகுதிஆகியவற்றைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்திய ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா பாரபட்சமின்றி சட்டங்கள் விமான நிலையத்தில் கடைப்பிடிக்கப்பட்டால் மோசடிகள் நடக்க இடமேற்படாது என்றார்.

சாதாரண பயணிகளைப் போல முக்கிய பிரமுகர்களின் பொதிகள் சோதனையிடப்பட வேண்டும். நேர்மையான எவரும்இதுகுறித்துகவலைப்படவே மாட்டார்கள். விமான நிலையத்தில் முறைகேடான நடவடிக்கைகள் இடம்பெறுவதற்கு உயர் அதிகாரிகளும் உடந்தையாக இருந்துவந்துள்ளார்கள் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (அ)

### வீதி சீர்கேடு

(இளவாலை)

கீரிமலை-இளவாலை வரை வீதி மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்துள்ளது. (138)

### கலை, கலாசார போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சன சமூக நிலையங்களின் சமாசம் கல்வி, கலை, கலாச்சாரப் போட்டிகளை நடாத்த உள்ளது.

யாழ். மாநகரசபைப் பகுதிச் சனசமூக நிலையங்களுக்கிடையிலான சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியப் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மரபுவழி இசைநாடகப் போட்டி அகில இலங்கை ரீதியில் நடாத்தப்படுமென்றும் இம்மரபு வழி இசை நாடகம் ஒன்றரை மணித்தியாலக்காட்சியைக் கொண்டதாக அமைய வேண்டுமென்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

இம்மாதம் 30ம் திகதிக்கு முன் போட்டியில் பங்குபற்றுபவர்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கலை, கலாசாரக்குழுத்தலைவர் கவிஞர் தேவதாசன் கோரியுள்ளார். (54)

## பலதும் பத்தும்

### பிரம்படி !

தண்டனைகள் பலவிதம்; பிரம்படி ஒருவிதம்!

வைகையாறு உடைப்பெடுத்தது, கரையையடக்கும்படி மக்களுக்கு மன்னன் கட்டளை; செம்மனச் செல்வியால் முடியவில்லை. இறைவனே வந்து மண்சுமந்திருக்கிறார், பிட்டைக் கூலியாகப் பெற்று.

வேலை ஒழுங்காக நடைபெறவில்லை என்பதற்காக அரிமர்த்தன பாண்டியன் மண்சுமந்த இறைவனுக்கு அடித்ததும் பிரம்பினால் தான்; அந்த அடி பாண்டியன் உட்படப் பலருக்குக் கிடைத்ததாகத் திருவிளையாடற் புராணம் கூறுகின்றது.

புனித பத்திரிசியார் அதிபராக இருந்த வண. பிதா லோங் அடிகளார் கண்டிப்புக்கு, கட்டுப்பாட்டுக்குப் பேர்போனவர். பகிரங்கப் பிரம்படி...? அதற்கும்தான்!

அடிகளார் பிரம்படி... பலரின் அறிவுக்கண்களைத் திறந்தது.

''நம்ம குருநாதர் நம்மை வருத்துவது நம் வினை போக்கவே...!'' இது அடிகளாரிடம் அடிவாங்கிய அடியவர்களின் ஆனந்தக்குரல்!

எனினும்... ஒருநாள்... பாடசாலைக்கு விடுமுறை...! ஏன்...! எதற்காக...?

பிரம்படி முறைக்குச் சாவு மணி அடித்திருக்கிறார்; பிரம்புகளைப் பகிரங்கமா எரித்திருக்கிறார்.

பிரம்புக்கு... விடுதலை; பாடசாலைக்கு...? விடுமுறை அத்தினத்தைக் கொண்டாட !

இன்று அவருக்கு முத்திரை - சகலருக்கும் மகிழ்ச்சிதான்... பிரம்படி பெற்றவர்கள் உட்பட...!

வாணி

மாணவர் மலர்ச்சிக்காக...... | சமூகவியல்

1. பிறநாடுகளிலிருந்து இலங்கை பெற்ற உதவிகள் எவை?

ஜப்பான் - கொழும்பு நகர நீர்வடிகால் அமைப்பு, மகாவலிப்பிரதேச மின்சாரம், தொலைக்காட்சிச்சேவை புதிய தலைநகர நிர்மாணிப்பு வேலைகள், மருத்துவமனை போன்ற கட்டடங்கள்.

கனடா - மாதுறு ஓயாத்திட்டம், கட்டுநாயக்கா விமானநிலைய அபிவிருத்தி, ஜின்தோட்ட ஒட்டுப்பலகைத் தொழிற்சாலை, புகையிரத டீசல் என்ஜின்கள்.

பிரித்தானியா - விக்டோரியாத் திட்டம், கொழும்பு துறைமுக அபிவிருத்தி, லக்சபான நீர்மின்திட்டம், சேனநாயக சமுத்திரத்திட்டம்.


சீனு - துல்கிரிய நெசவாலை, பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபம், பேராதனை நீர்மின்திட்டம்.

மேற்கு ஜேர்மனி - காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, றந்தெனிய திட்டம்.

சுவீடன் - கொத்மலைத் திட்டம்

நியூசிலாந்து, டென்மார்க், அவுஸ்திரேலியா கால்நடை அபிவிருத்தி.

ரேவதி.




# மண்ணின் மைந்தன் வண. ...
# ஞாபகார்த்த நினைவு முத்தி...

அடிகளார்

## "ஐயாவென ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியன்"

ந. சபாரத்தினம்
(இளைப்பாறிய அதிபர்,
யாழ். இந்துக் கல்லூரி)

வரலாறு என்பதற்கும் பல்கலைக்கழகம் என்பதற்கும் வரைவிலக்கணம் கூறிய ஆங்கிலப் பேரறிஞன் கார்லைல் (Carlyle) ஒரு நாட்டின் பெரியார்களின் சரிதையே வரலாறு என்றும் பல்கலைக்கழகம் என்பது ஒரு மாபெரும் நூல் நிலையமே என்றும் சொன்னார். இக்காலத்தில்இக்கருத்துக்களை முற்றாக ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும் இவற்றுள் பொதிந்திருக்கும் பேருண்மை இன்றும் எம்கண்முன்னிலையில் நடமாடுகின்றது.

தேசிய வீரர் வரிசையில் வைத்துக் கௌரவிக்கப்படும் அபூர்வ துறவி வண. T. M. F. லோங் அடிகளார். இன்றும் ஆங்கிலப் புலவனின் மணிவாக்குகளுக்கு மெருகு ஊட்டுகின்றார். எக்காலத்திலும் அதிமனிதர் தோன்றி தமமுடைய வாழ்வுக்கும் தம்மைச் சார்ந்த மக்கள் ஸ்தாபனங்களுக்கும் அசாதாரண ஆக்கம்விளைவிக்க வல்லவர்களாகக் காணப்படுகின்றனர். யாழ்ப்பாண வரலாற்றில் மட்டுமல்ல நாட்டின் பல்வேறு துறைகளிலும் தமது தனித்துவ முத்திரையைப் பதித்துவிட்டுச் சென்றார் மாவீரர் வண. T. M. F. லோங் அடிகளார். அந்த முத்திரையின் மகத்துவத்தை அனுபவித்து வந்த மக்கள் குறிப்பாக யாழ். மக்கள் இன்று வெளியாகும் முத்திரையில் எதுவித அபூர்வமும் காணமாட்டார்.

அயர்லாந்தில்யாழ்ப்பாணத்துக்கென அவதரித்த அபூர்வத் துறவி லோங் அடிகளார். இரண்டாவது உலக யுத்தமுடிவில் அமெரிக்கா சென்று யாழ் நூல் நிலையத்திற்கு பெரு நிதி திரட்டி வந்தார். 1946ம் ஆண்டு இறுதியில் யாழ். நகர ஆசிரியர் சங்கச் செயலாளராகப் பணிபுரிந்த அடியேனை அவ்வாண்டில் பொதுக்கூட்டத்துக்கு இந்த வெற்றி வீரரையே பிரதம அதிதியாக அழைக்கவேண்டுமென்று ஒரே குரலில் சங்கம்கேட்டுக்கொண்டது.

சம்பத்தரிசியார் கல்லூரி ஆசிரியர்கள் யாழ் மத்தியக் கல்லூரி மண்டபத்தை முற்றுகையிட்டாற்போல் பெருந்திரளாக வந்திருந்தனர்தொடக்கவுரையில் (Long) சந்நிதானத்தின் மிகச் சுருக்கமாகப் பேசுவதே பொருத்தமென நினைத்து "இன்று காட்சியளிக்கும் பிரதம விருந்தினர் மிக அண்மையில் நாடு திரும்பிய அமெரிக்க பெரியார் (Most Recently Returner Yankee) என்று ஹாஸ்யமாக குறிப்பிட்டேன். அவ்வளவுதான்; அன்றைய கூட்டத்தில் சுமார் பத்து நிமிடம் பேசி கூட்டங் கலைந்தபின் அரைமணி நேரம் அங்குள்ளவர்களுடன் உரையாடிய மாமனிதன் அறிவு விளங்க கல்வி புகட்டும் ஆசிரியன் மனநிறைவுடைய அதிசயத்துறவி என்பதை எங்கள் அனைவருக்கும் நினைவூட்டியது இன்றும் மறக்க முடியாத சம்பவம்.

எந்த மதப் பண்பாட்டிற்கும் பெருமை தருபவர் குரு. அறியாமை என்ற இருளை அகற்றி ஞானம் என்ற துலக்கும் ஆற்றல்வாய்ந்த திறமையாளன் குரு என்று வியந்து கூறப்படுகின்றது. அவ்வரிசையில் முதன்மை பெறுபவர் இன்று சேதமடைந்திருக்கும் நூல் நிலைய முன்றலில் சிலையாகக் காட்சியளிக்கும் Long அடிகளே! தர்மம் நலிந்து அதர்மம் பெருகிவரும்இக்காலத்திலும் அடிகளார் செய்த ஆக்கவேலைக்கு நிரந்தரமான அழிவில்லை என்பதே ஆடாமல் அசையாமலிருக்கும் ஆக்கல்லின் கதை; பீனிக்ஸ்(Phoenix) என்ற அதிசயப் பறவைபோல் பன் மடங்கு பெருத்து ஆசியாவின் இப்பகுதி மககளுக்கு மீண்டும் கலங்கரமாக மிளிரும் என்ற நம்பிக்கை காலலாளியாயிருக்கும் அடிகளின் சாயலில் மிளிர்கின்றது.


தமிழ்நாடு உலகுக்குஅளித்த தெய்வப் புலவர் குறிப்பிடும் குறள் ஒன்று Long அடிகளாரின் ஆளுமைக்கு இலக்கணம் கூறுகின்றது.

"இதனை இதனால் இவன்
முடிக்குமென்றாய்ந்து
அதனை அவன் கண்விடல்"

யாழ். மாநிலத்திலும் வேறு இடங்களிலும் அடிகளார் கட்டி எழுப்பிய ஸ்தாபனங்களுக்கும் உருவாக்கிய மாணவமணிகளுக்கும் வள்ளுவர்கூறிய இந்த ஆற்றலே காரணமாயிருந்தது.

"மோத்தா-வா" (அவருடைய கல்லூரி ஆசிரியர்) "மயிலா-வா" (எங்கள் கல்லூரி ஆசிரியர்) என்று சுண்டுவிரலால் ஆள்சேர்த்துஎத்தனை கண் காட்சிகள் களியாட்ட விழாக்கள் திறம்பட அமைத்து மக்களை குதூகலிக்க வைத்தது ஒருபுறம். யாழ்ப்பாண வள்ளல்கள் பணத்தை இறுக்கி முடியும் பிறவிகள் என்பதை அறிந்த அடிகளார் லட்சக் கணக்கில் லேசாக பணத்தை வசூலித்தது இன்னொருபுறம் நாம் குறிப்பிட்ட காலத்தில் இந்த வழியை எங்கள் கல்லூரி உட்பட பல கல்லூரிகள் பின்பற்றியதால் இவர் இத்துறையில் ஒரு கொலம்பஸ் (Colombus) ஆகிறார். - யாழ். இந்துக்

(7-ம் பக்கம் பார்க்க)



வண. பிதா லோங் அடிகளாரின் அரும்பெரும் முயற்சியால் உருவாக்கப்பட்ட 'மத்தியூஸ் கட்டிடம் படம்: 'தேவா'

## லோங் அடிக...

வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி. மக்கள் மனதில் நிலைத்தவர் சிலரே." இந்த வரிசையில் லோங் அடிகளார் முதன்மை பெற்றவர். அவர் ஒரு சொல் வீரனாக வாழாது செயல் வீரனாகவே வாழ்ந்தார். அயர்லாந்து நாட்டில் பிறந்தவராக இருந்தாலும், யாழ். நகரையே தன் பிறப்பிடமாக நினைத்து தமிழ் மக்களைத் தம் உயிருக்கும் மேலாக நேசித்தார்.

'தமிழ் மகன்' எனத் தன்னை பிறர் அழைப்... பட்ட லே... தமிழ் மக்கள்... சிக்காக அ... தார்' பிரம்...

## டாக்டர் ...

மாணவர்களு... டுவதுதவறு, ... தைகளால்தா... களுக்கு கல்... டுமென்பதற்... தீயிலிட்டுப் ... யாழ். நகர ... வளர்ச்சிக்கு ...

## கலா... அடிக...


கலாசா... வகையில் லோ... மிகவும் சாது... லாற்றி வந்தா... யர்களின் பூ... பைப் பெற்று ... யான நிர்வாக... டுகளாய் நடா...

ஆசிரியர்க... டுறவுச்சங்கத்... கினார். அவர்க... மிகவும் அக்க... நிர்வாகப் ... பகிர்ந்துகொடு... மூலம் எல்லோ... மைப்பைப்பெ... களின் அன்...

## தோன்றிற் ...

யாழ்ப்பாண மண்ணின் மைந்தனாகத் திகழ்ந்த அதி. வண. லோங் அடிகளார் பிறந்த இடம் வேறு, பேசிய மொழி வேறு, வாழ்ந்த சூழலும் வேறு, ஆனால் அவர் பயின்ற கல்வியும்' ஆற்றிய பணியும் அந்நிய தேசமான எம்மண்ணில் ... வைத்தது. அ... ஆளுமை, உ... நலமற்றபணி... இவற்றால் த... யில், விளையா... தொழிலில், ... ஏன் அனை... லுமே வளர்ச்...

இவர் கால... பத்தரிசியார் ... விளையாட்டு, ... வாக்கல் பயிற்... னேற்றகரமா... பாரிய வளர்ச்... கையில் எல்... களுக்கும் அ...



வண. பிதா. லோங் அடிகளாரின் ஞாபகார்த்த முத்திரை வெளியீட்டுக்காக அயராது சேவையாற்றிய யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் குழுவினரை இப் படத்தில் காணலாம்.

என்... திண்...

செப்... புரட்... பாவு... உல... பிதா... பசுவ... உள்...

# .பிதா லோங் அடிகளார்

# ரை வெளியீட்டு விழா



## ளார் ஒரு செயல் வீரர்

ப்பதில் பெருமைப்
லாங் அடிகளார்
ரின் கல்வி வளர்ச்
அயராது உழைத்
ம்படி கொடுத்து

மிக அவசியம் என்பதை உணர்ந்த லோங் அடிகளார் உலகின் பல பாகங்களுக்கும் சென்று பணம் திரட்டி வந்தது மட்டுமல்ல பல அரும்பெரும்

### ஜே. பி. சி. பிலிப்ஸ் ஜே. பி.

நக்கு கல்வி புகட்
அன்பான வார்த்
ான் மாணவர்
வி புகட்டவேண்
காக பிரம்பை
பொசுக்கினுர்.
மக்களின அறிவு
ஒரு நூல் நிலையம்

நூல்களையும் திரட்டிவந்து ஆசியாவிலேயே சிறந்த நூல் நிலையங்களில் ஒன்ருகத் திகழக்கூடிய பொது நூல் நிலையம் ஒன்றை யாழ். நகரில் உருவாக்கினுர்.

2-ம் உலக யுத்த காலத்தில் ராணுவ விமான நிலையமாக ஆங்கிலேயரால் பாவிக்கப்பட்டுவந்த பலாலி விமான நிலயத்தை, யாழ்.நகர மக்கள் பாவிக்கக்கூடிய சிவில் போக்குவரத்து விமான நிலையமாக மாற்றிய பெருமையும் லோங் அடிகளாரையே சாரும்.

கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு இவைதான் யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி மாணவர்-ஆசிரியர்களிடையே முதன்மை பெற்று விளங்க வேண்டும் என்ற அடிப்படையில் இக்கல்லூரியை வழி நடத்திவந்தார். சொல்லிலே நின்றுவிடாது செயலிலும் காட்டினுர். சுருக்கமாகக் கூறின் ஆசிரியர், மாணவர்களுடைய ஒவ்வொரு செயற்பாடுகளிலும், கல்வி வளர்ச்சியிலும், கத்தோலிக்க வழிபாடுகள் ஒவ்வொன்றிலும் விளையாட்டுத்துறையிலும் தோளோடு தோள் நின்று தானும் ஒருவனுகப் பங்குபற்றினுர். சம்பத்திரிசியார் கல்

(7-ம் பக்கம் பார்க்க)

## சாலை அதிபர் லோங்
## ளாரும் ஆசிரியர்களும்

லை அதிபர் என்ற
ாங் அடிகளார்
ரியமாகச் செய
ர். தனது ஆசிரி
ரண ஒத்துழைப்
மிகத் திறமை
த்தை 18 ஆண்
த்திஞர்.
நக்சென்று கூட்
தையும் உருவாக்
ளின் நலனில்
றை காட்டினுர்.
பொறுப்பைப்
த்து அதன்
ரினதும் ஒத்து
ற்ருர். ஆசிரியர்
யும் நன்மதிப்

பையும் பெற்று கல்லூரியானது பல துறைகளிலும் முன்னேற்றம் காண வழிவகுத்தார்.

பல சந்தர்ப்பங்களில் தனது ஆசிரியர்களைப் புகழ்ந்து அவர்களின் மனதைக் கவர்ந்தார். அவரின் புகழாரத்தைக்கேட்க வேண்டுமென்ற ஆசையினுல் ஆசிரியர் அனைவோரும்தத்தம் பணிகளைத் திறமையுடன் செய்துமுடிததனர். அதன் காரணமாய் எத்துறையிலும் சம்பத்திரிசியார் கல்லூரி முன்னணியில் நின்றது.

ஆசிரியர்
F. N. C. சவிரிமுத்து

## அதிபர் லோங் அடிகளாரும் விளையாட்டுத்துறையும்

விளையாட்டுத்துறை ஆசிரியர் பி. ஆர். மோத்தா

வண. லோங் அடிகளாரின் வருகையுடன் சம்பத்தரிசியார் கல்லூரியின் விளையாட்டுத்துறை புத்துயிர் பெற்றுப் பல வகையிலும் முன்னேற்றம் கண்டது. இவற்றிற்கெல்லாம் 'முயன்ருல் முடியும்' (Can do) என்னும் லோங் அடிகளாரின் தத்துவ மந்திரமே காரணமாயிற்று.

இதன் விளைவாய் விளையாட்டுத்துறையில் பத்து வருடம் தொடர்ச்சியான வெற்றியும், கிரிக்கெட் ஆட்டத்தில் ஆறு வருடம் தொடர் வெற்றியும், உதைபந்தாட்

(7-ம் பக்கம் பார்க்க)

## வண. லோங் அடிகளாரும் பழைய மாணவர்களும்

(J. D. ஆசீர்வாதம், V. A. S. A. ஜேசவ்
பழைய மாணவர் சங்கம், கொழும்பு.)

இரண்டாம் உலக மகா யுத்தம் முடிந்தவுடனே லோங் அடிகளார் கொழும்பு புனித பிலிப் நேரியார் தேவாலயத்தில் பழைய மாணவர்களுக்கு என்று ஞாயிறு காலை ஆராதனை நடாத்தி ஒப்புக்கொடுத்து அதைத் தொடர்ந்து நடைபெற்ற பழைய மாணவர் சங்கக்கூட்டத்திலும் உரையாற்றினுர்.

அதன் பயனுய், பழைய மாணவர்கள் லோங் அடிகளாரின் பாரிய திட்டங்களுக்குத் தம்மாலான உதவி ஒத்தர்சைகளைக் கொடுக்க முன்வந்தனர். அவர்களின் பங்காற்றலும் அவருக்குப் பக்கபலமாய் அமைந்தனவென்று கூறுவது மிகையாகாது. லோங் அடிகளார் தமது பழைய மாணவர்கள் மட்டில் மிக்க அன்பும் மதிப்பும் வைத்திருந்தார். அவர்கள் எங்கிருந்தபோதும் தமது மாணவர்களேதான் என்னும் எண்ணத்துடன் தம்

(7-ம் பக்கம் பார்க்க)

## புகழொடு தோன்றுக

காலடி பதிக்க
வரது ஆற்றல்,
நவாக்கம், தன்
, தியாகசிந்தை,
ழ் சமூகம் கல்வி
ட்டில், கைத்
கலை வளர்ச்சியில்
ந்துத் துறைகளி
ி கண்டது.
த்தில் புனித சம்
கல்லூரி கல்வி,
இளைஞர் உரு
சி போன்ற முன்
ன துறைகளில்
சி பெற்று இலங்
ா இன, மத மக்
ர்கள் முன்னேற்

றத்திற்கு உதவியதோடல்லாமல், பல வெளிநாட்டு மாணவர்களை முதலாய் யாழ். நகருக்குக் கல்வி பயில வழி வகுத்தது. அடிகளாரின் கல்வித்திட்டத்தால் கவரப்பட்ட

### அ. அன்ரன்ஜெரூட்

அரசாங்கம் அவரையும் தேசிய கல்விக்கொள்கை வகுப்போர் குழுவில் சேர்த்தது. வண. லோங் அடிகளார் இப்பதவியின் காரணமாக இலவசக்கல்வித் திட்டத்தின் கீழும் தனியார் பாடசாலைகள் இயங்குவதற்கு அனுமதி பெற்ருர்.

நவீன தொழில் நுட்பத்தை யாழ். நகரில் புகுத்தவும், மக்கள் உலகின் முன்னேற்றத்தைத் தங்கள் அனுபவததில் கண்டறியவும், இதன் வழி யாயகத் தமிழ் மக்கள் பொருளாதாரவளம் பெறவும், 1938 ஆம் ஆண்டிலே அகில இலங்கைக் கைத்தொழில் கண்காட்சியும், களியாட்ட விழாவும் ஒழுங்கு செய்து மக்களை மகிழ்விக்க வழிசெய்தார்.

லோங் அடிகளார் கலை உல

(8-ம் பக்கம் பார்க்க)

### உலகை உய்விக்கும்
### ஆன்மா சேவை

ணிய முடிதல் வேண்டும்
நல்லவை எண்ணவேண்டும்
ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்'' என்று
ிய செம்மல் எங்கள்
ிக்கவி பாரதி
கள் உள்ளமதில் உறைந்து
கல்லாம் பரவிடவே
லோங் அடிகளார் நினைவு என்றும்
மயுடன் நின்று உங்கள்
மதை உருமாற்றட்டும்

- தாவீதுதாசன்.



சம்பத்திரிசியார் கல்லூரியின் வரலாற்று முக்கியத்துவ நாள். மாணவர்கள் சுயமாகவே கல்வி கற்க வேண்டும். அதைவிடுத்து அவர்களின் உடலை வருத்தி கல்விபுகட்ட உபயோகப்படுத்தும் பிரம்புகளை லோங் அடிகளாரின் தலைமையில் எரித்த போது எடுத்தபடம்.

சுந்தரம் பிறதர்ஸ்,
யாழ்ப்பாணம்.

Mohamedally Abdullaly,
GRAND BAZAAR
JAFFNA

றிக்கோ சுவீற்ஸ் அன் கிறீம் ஹவுஸ்,
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

YARL BEACH INN,
139, BEACH ROAD,
JAFFNA.

கமலா ஸ்ரோர்ஸ்,
123, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

பிறின்ஸ் பேக் ஹவுஸ்,
311, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

Parasco Engineering Works,
798, POINT PEDRO ROAD,
NALLUR, JAFFNA.

P. I. FERNANDO,
SPECIALISED OPTICIAN & DENTAL WORKS,
292, (540) HOSPITAL ROAD,
JAFFNA.

R. G. STORES,
293, CLOCK TOWER ROAD,
JAFFNA.

EVER VISION,
21 - A, CLOCK TOWER ROAD,
JAFFNA.

THE NEW AUTOS,
44 - B, CLOCK TOWER ROAD,
JAFFNA.

ROYAL MOTORS,
182, STANLEY ROAD,
JAFFNA.

## ★ சமாதான முயற்சி தொடர்கிறது

# காஷ்மீர் எல்லையிலிருந்து படைகளை விலக்க

# இருநாட்டுக்கும் அமெரிக்கா கோரிக்கை

## யுத்தம் தோன்றலாமென வல்லரசுகள் அச்சம்

[வாஷிங்டன்]

**இந்தியாவும், பாகிஸ்தானும் காஷ்மீர் எல்லைப்புறங்களில் குவித்துள்ள ஆயிரக்கணக்கான துருப்புக்களையும் உடனடியாகத் திருப்பி அழைக்கவேண்டுமென அமெரிக்க அதிபர் திரு. ஜோர்ஜ் புஷ் இரு நாடுகளையும் கோரியுள்ளார்.**

**எனினும் இரு நாடுகளும் எல்லைப்புறத்தில் அதிகளவு துருப்புக்களைக் குவித்து வருவதால் ஓர் அணு ஆயுத யுத்தம் வெடிக்கலாம் என வல்லரசுகள் அச்சம் தெரிவித்துள்ளன.**

தெற்காசிய பிராந்தியத்தில் எழுந்துள்ள போர்க்கால சூழ்நிலையை உடனடியாக தவிர்க்கும் பொருட்டு அமெரிக்க அதிபர் திரு. புஷ் தனது விஷேட பிரதிநிதிகளையும் இரு நாடுகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார். இதன்போது அதிபர் புஷ் விடுத்த மேற்படி வேண்டுகோள் செய்தியையும் இருநாடுகளுக்கும் பிரதிநிதிகள் சமர்ப்பித்துள்ளனர்.

அமெரிக்க தேசிய பாதுகாப்பு சவுன்சிலைச் சேர்ந்த மூன்று உயரதிகாரிகளடங்கிய இந்த பிரதிநிதிகள் குழு இன்று இந்தியப் பிரதமர் திரு. வி பி. சிங்கைச் சந்தித்துப்பேச்சுக்கள் நடாத்தவுள்ளனர். இதன்போது யுத்தம் தவிர்க்கப்படவேண்டியதின் அவசியம் குறித்தும் வலியுறுத்தப்படுமென அமெரிக்க பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை காஷ்மீர்எல்லைப்புறத்தில் இரு நாடுகளும் ஆயிரக் கணக்கான துருப்புக்களைக் குவித்து வருகிறது. எந்த நிலையையும் சமாளிக்கும் விதத்தில் இருதரப்புத் துருப்புக்களும் தயார் நிலையில் உள்ளன. மேலும் இரு நாடுகளிடமும் அணுவாயுத தொழில்நுட்பம் உள்ளதால்இப்பிராந்தியத்தில் அணுவாயுத யுத்தம் ஏற்படும் சாத்தியக்கூறுகள் அதிகரித்து வருவதாக வல்லரசுகள் கவலை தெரிவித்துள்ளன.

இதேவேளை முஸ்லிம் நாடுகளில் ஆதரவு தேடும் நோக்கில் பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனுஷிர் பூட்டோ சுற்றுப்பயணமொன்றை மேற்கொண்டு வருகிறார். பாகிஸ்தான்யுத்தமொன்றை நடாத்த விரும்புவதாலேயே இவர் முஸ்லிம் நாடுகளின் முழு ஆதரவையும் தேட சென்றுள்ளதாக இந்திய தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

---

### வட்டுக்கோட்டை வைத்தியசாலையில்

## சிரமதானப்பணி

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலையில் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் சுவர்களுக்கு 'வர்ணப் பெயின்ற்' பூசப்பட்டு, வைததியசாலை புது மெருகுடன் காட்சியளிக்கிறது. வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபையிடம் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து பணிப்பாளர் வழங்கிய பத்தாயிரம் ரூபா நிதியைக் கொண்டு 'பெயின்ற்' வகைகள் வாங்கப்பட்டன.

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தினராலும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களினாலும், மற்றும் வைத்தியசாலை ஊழியர்களினாலும் சிரமதான முறையில் இப்பெயின்ற் வர்ணப் பூச்சுக்கள் பூசப்பட்டன.

வைத்தியசாலை வார்ட்டுக்களிலுள்ள நோயாளர்களின் கட்டில்கள், வெளிநோயாளர் பிரிவிலுள்ள வாங்குகள். மற்றும் மரத்தளபாடங்கள் ஆகியனவும் சுத்தப்படுத்தப்பட்டு பெயின்ற் தீந்தை பூசப்பட்டுள்ளதாக வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் அ. செல்வராசா இதுபற்றித் தெரிவித்தார். இச்சிரமதானப்பணியில் பங்குபற்றி ''பெயின்ற்'' பூச உதவியோருக்கு டாக்டர் செல்வராசா நன்றியும், பாராட்டும் தெரிவித்தார். (72)

---

# இஸ்ரேல் துருப்புகள் சுட்டதில் ஏழு பலஸ்தீனியர் பலி

## அமெரிக்கா கண்டனம்

[ஜெருசலம்]

பலஸ்தீனிய தாயகப்பகுதியில் நேற்று முன்தினம் இஸ்ரேலியத் துருப்புக்கள் மேற்கொண்ட தாக்குதலில் ஏழு பலஸ்தீனியர்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்துள்ளனர். இச்சம்பவம் அங்கு பெரும் கொந்தளிப்பு நிலையை ஏற்படுத்தியுள்ளது:

தொழில் முயற்சி ஒன்றில் ஈடுபட்டிருந்த இந்த பலஸ்தீனியர்களை இஸ்ரேலியத் துருப்புக்கள் சுட்டுக் கொன்றுள்ளனர். இச்சம்பவம்பற்றிஉடனடியாக விசாரணை நடாத்தப்படும்என்றும் அப்பாவி பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதுகுறித்து தாம் மிகுந்த கவலையடைவதாகவும் இஸ்ரேலிய பிரதமர் திரு.ஷமீர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து அமெரிக்கா பலத்த கண்டனம் தெரிவித்துள்ளதுடன் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாது தடுக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளது. பழிவாங்கும் செயல் எதனையும் மேற்கொள்ள வேண்டாமென்றும் அமெரிக்கா பலஸ்தீனியரைக் கோரியுள்ளது

இதேவேளை இவ்விவகாரத்தில் உறுதியான நடவடிக்கை எடுத்து பலஸ்தீனியரை காக்குமாறு கோரி மூன்று முக்கிய தலைவர்கள் நேற்று உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர். (சி)

---

### காங்கேசன்துறையில்

## நடமாடும் தபால் சேவை

### அலுவலகம் ஆரம்பிக்கப்படும்

(காங்கேசன்துறை)

காங்கேசின்துறை ரயில் நிலயத்திற்கு அருகாமையில் நடமாடும் தபால் சேவை அலுவலகம் இரண்டு மாடிக்கட்டிடமாக அமைககப்படவுள்ளது.

காங்கேசன்துறை ரயில் நிலயத்திற்கருகாமையில் அமைந்துள்ள இருமாடிக் கட்டிடங்களில் ஏறகனவே இந்த நடமாடும் தபால்சேவை அலுவலகம் இயங்கி வந்தது.

ஆனால் கடந்த காலங்களில் இந்திய அமைதிப்படையினர் இக்கட்டடங்களில் தங்கியிருந்தமையால் அவை சேதமுற்று உபயோகிக்கமுடியாத நிலையில் இருந்தன.

அண்மையில் இரவு ரயிலில் தபால்சேவை ஆரம்பிக்கப்பட்டதையடுத்து மேற்படி கட்டிடங்களில் ஒன்று தற்காலிகமாகத் திருத்தப்பட்டு நடமாடும் தபால்சேவை அலுவலகம் இயங்கிவருகிறது.

ஆனால் ரயில் தபால் பிரிவில் கடமையிலீடுபட்டுவரும் 18 ஊழியர்களும் தங்கியிருந்து தபால்களை தரம் பிரித்துக் கடமைகளை மேற்கொள்ள இக்கட்டிடம் போதாமல் இருப்

(7ம் பக்கம் பார்க்க)

---

## ஹங்கேரியிலிருந்து சோவியத் படைகளை வெளியேற்ற அமெரிக்கா உதவவேண்டும்

### அதிபர் புஷ்ஷிற்கு கோரிக்கை

(புக்காரஸ்ற்)

ஹங்கேரியிலிருந்து சோவியத் துருப்புக்களை உடன் வாபஸ் பெற அமெரிக்கா வலியுறுத்தவேண்டுமென அந்நாட்டு பதில் அதிபர் திரு. ஆர்பட் ஹொன்சா அமெரிக்க அதிபர் திரு. ஜோர்ஜ் புஷ்ஷை கோரியுள்ளார்.

இது தொடர்பாக விசேட தந்தி ஒன்றையும் திரு. ஹொன்சா அமெரிக்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளார். அந்தத்தந்தியில், 1991ம் ஆண்டு ஜூன் மாதத்திற்கிடையிலாவது சோவியத் துருப்புகளை ஹங்கேரியிலிருந்து விலக்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுள்ளார்.

ஹங்கேரியில் தற்போது சுமார் 50,000 சோவியத் துருப்புகள் நிலைகொண்டுள்ளன. இவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஹங்கேரி சோவியத் யூனியனைப் பல தடவைகள் கோரிவந்தபோதும் சோவியத் யூனியன் அதற்கு இதுவரை செவிசாய்க்கவில்லை. இதை அடுத்தே தற்போது இவர்களை வெளியேற்ற அதிபர் புஷ் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 30.ம் திகதி முதல் ஜூன் 4-ம் திகதிவரை அமெரிக்காவில் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு சோவியத் அதிபர் திரு. கொர்பச்சேவ் அமெரிக்கா செல்வதும் குறிப்பிடத்தக்கது. (சி)

---

### திருமணத்திற்குச் சென்ற

## பஸ்விபத்தில் சிக்கி மணமகன் பலி

(புதுடில்லி)

திருமணம் ஒன்றிற்குச் சென்றுகொண்டிருந்த பஸ் வண்டி ஒன்று மரத்துடன் மோதியதில் மணமகன் உட்பட 14 பேர் பரிதாபமாக உயிர்நீத்த சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை குஜராத்தில் நடைபெற்றுள்ளது.

திருமணத்திற்காக தொலை தூரத்திலுள்ள மணப்பெண்ணின் வீட்டை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ் வண்டி ஒரு திருப்பமொன்றில் வேகமாகச் சென்று திரும்பியபோதே பாரிய மரமொன்றுடன் மோதுண்டது.

இதனால் மணமகனும் அவரது இரு சகோதரிகளும் உட்பட 14 பேர் ஸ்தலத்திலேயே பலியானார்கள். 65 பேர் பலத்த காயமடைந்தனர். பஸ் சாரதியும் பலியானார். பஸ் பலத்த சேதமடைந்துள்ளது. (சி)

---

### தென் ஆபிரிக்காவில்

# பொலிஸ் - கறுப்பினத்தவர் மீண்டும் கடும்மோதல்

## தாக்குதலில் ஐவர் பலி

(ஜொகெனஸ்பேர்க்)

தென்ஆபிரிக்காவில் பொலிஸாருக்கும் கறுப்பினத்தவர்களுக்குமிடையில் கடந்த சில தினங்களாக பெரும் கலவரம் இடம்பெற்றுவருகிறது. நேற்று முன்தினம் 5 கறுப்பினத்தவர்கள் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

அண்மையில் கறுப்பினத்தவர் நடாத்திய ஊர்வலம் ஒன்றை பொலிஸார் பலவந்தமாக கலைத்தனர். இதையடுத்து பொலிஸாருக்கும் கறுப்பினத்தவர்களுக்குமிடையில் கலவரங்கள் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

இதுவரை இவ்வாறான கலவரங்களில் 18 கறுப்பினத்தவரும் 6 பொலிசாரும் கொல்லப்பட்டுள்ளனர். இக்கலவரம் ஏனைய சில பகுதிகளுக்கும் பரவி வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. பொலிஸாரின் நடவடிக்கைகளை பல தலைவர்களும் வன்மையாக கண்டித்துள்ளனர்.

இதேவேளை தென் ஆபிரிக்காவில் அதிபர் திரு. டபிள்யு. டி. கிளார்க் மேற்கொண்டு வரும் பல சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு எதிராகவே பொலிஸார் கறுப்பினத்தவர்களுடன் மோதலில் ஈடுபட்டுவருவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர். (சி)

# தோன்றிற் புகழொடு

(5ம் பக்கத் தொடர்ச்சி)

கிலும் கைவைக்கத் தவறவில்லை. அன்றைய நாட்களில் கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு பொம்மைக் கூத்தாகவே காண்பிக்கப்பட்டது. ஆனால் அவரோ தம் திறமையால் உயிருள்ள நடிகர்களை உருவாக்கினார். கிறிஸ்துவின் திருப்பாடுகளின் காட்சி இவர் முயற்சியினால் மிகத் திறமையாக நடித்துக்காண்பிக்கப்பட்டது. இதன் வழியாக நடிகர்கள் பலரும், கலைஞர்களும், எழுத்தாளர்களும் உருவானார்கள்

குடாநாட்டிற்கு விமான சேவையைப்பெற்றுத்தந்தவர். வண. லோங் அடிகளாரே! அன்று விமானப் படைத் தளபதியான ஏ. ஆர். வாட்லி என்பவர், அடிகளாரின் அரிய நண்பனாக இருந்ததால், அவர் மூலமாக தனது விடாமுயற்சியினால் யாழ். மக்களுக்கு நிச்சயம் விமானசேவை அவசியம் என எடுத்துக் கூறியதால் பலாலி விமான நிலையம் 2ம் உலகப் போருக்குப்பின் மக்களின் நலனுக்காகத் திறக்கப்பட்டது. என்றோ ஒருநாள் நாம் பலாலியில் சர்வதேச விமான சேவைகளைப் பெற்றோமானால் அதன் பெருமை அனைத்தும் வண. லோங் அடிகளாரையே சாரும்.

தமிழ் மக்கள் கல்வியின் மேல்கொண்ட காதலை அவர் கண்டார். அறிவைப் பெறுவதில் ஊக்கத்தை உணர்ந்தார் யாழ். மக்களின் அறிவுப் பசியைத்தீர்ப்பதற்கு அவர்களிடம் பொருளாதார வளம் இல்லை எனக்கண்டார். சிந்தித்தார். வாழாவிருக்கவில்லை செயற்பட்டார். சென்றார் ஐக்கிய அமெரிக்கா நாட்டிற்கு. கையேந்திக் காசுசேர்த்தார். தம் மக்களுக்காகப் பிச்சா பாத்திரம் ஏந்தினார். மிகப் பெரும் பணத்துடன் வந்து தனது பாரிய திட்டமான யாழ். பொதுசன நூல்நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார். வண. லோங் அடிகளாரின் முக்கிய முயற்சியால் முளைத்தெழுந்த நூல்நிலையம் தென்கிழக்காசியாவிலேயே அரியதோர் பொக்கிஷமாய்த் திகழ்ந்து பல்லாயிரக்கணக்கான எம்மக்கள் வாழ்வை வளப்படுத்தியது; ஆனால் எம் முன்னேற்றத்தைக்கண்டு சீரணிக்கமுடியாதவர்கள் அதனை எரித்தார்கள்.

இவ்வளவு சேவைகளும் அவர் தமிழ் மக்களுக்கு ஏன் புரிந்தார். ஆம் அவரும் ஒரு சிறுபான்மை இனத்தவராக அயர்லாந்து நாட்டவராக இருந்தார். எமது நிலையை எதிர்காலத்தைக் கவனித்துக் கணித்தார். இறைவன் அவர் மூலமாக எமது இனத்திற்குப் பலசெய்திகளையும், அனுபவங்களையும் கொடுத்தார்.

அடிகளாரின் உதவிகள் பெற்ற யாழ். மக்கள் அவருக்கு நன்றிக்கடனாக அவரின் உருவச்சிலையையும் யாழ் நூல் நிலையத்தின் முன் நிறுவினார்கள். தற்போது அவரின் நினைவாக முத்திரை வெளியிட்டு மகிழ்கிறார்கள். நன்றிக் கடன் தீர்ப்பதில் இம் முயற்சிகள் போதுமா? இல்லை. அன்று 'அயர்லாந்தின் யாழ்ப்பாணத்தான்'' என்று வர்ணிக்கப்பட்ட வண. லோங் அடிகளார் எதை விரும்பினார். மக்கள் உயர்ச்சியை, முழு மனித வளர்ச்சியை, இந்த மாண்புமிகு முயற்சிக்குஎமது பங்களிப்பைச் செலுத்திவிட்டோமோ? அல்லது முயற்சிதானும் செய்கின்றோமா? ஆம் என்றால் லோங் அடிகளார் தமது பணியின் இறுதி வெற்றியை அடைந்துவிட்டார்.

''தோன்றிற் புகழொடு
தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை
நன்று,''

# ஐயாவென ஓங்கி ஆழ்ந்த

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கல்லூரியின் நவீன தோற்றத்துக்கு சிற்பியாயுள்ள அமரர் A. குமாரசுவாமி இவருடைய சம காலத்தவர். இரண்டு பெரிய களியாட்ட விழாக்களை 1940லும், 1946லும் ஈட்டிய வெற்றிக்கு அடிகளார் அளித்த ஊக்கம் பெரும் பங்குடையது.

கேம்பிறிஜ் (Cambridge) பல்கலைக்கழகத்தில் M A. பட்டப்படிப்பு காலத்தில் அவருடைய சமகாலத்திய பின்னர் British பிரதமராக வந்த அந்தோனி ஈடின் (Anthony Eden) என்பதை நோக்கும்போது அடிகளார் ஒரு பேரரசு ஆட்சி செய்யும் திறமையுடையவர் என்பது தெளிவாகின்றது. ஆனால் அயர்லாந்தில் இவரை அவதரிக்கவைத்த தெய்வம் நம்முன்னோர் செய்த தவப் பயனால் இச்சிறு தீவிலுள்ள பழம்பெருமை பெற்ற யாழ்ப்பாணத்துக்கென்றே பரிசாக வழங்கியது.

எந்த நாட்டிலும் எந்தச் சபையிலும் எந்த மக்கள் கூட்டத்திலும் அடிகளார் தோற்றத்தை கேள்வியுற்ற ஒருவன் அவர் இவர்தான் என்று இணங்கான முடியும் திறன்; அவருடைய உயர்ந்த உள்ளமும், பருத்த இதயமும் ஆழமான சிந்தனை ஆற்றலும், மிக நுணுக்கமான உணர்ச்சி திறமையும் அவர் தோற்றத்தில் பிரதிபலிக்கின்றதை நிரூபிக்கின்றது. எனவே மாணிக்க வாசக சுவாமிகள் தெய்வத்தை வியந்து கூறுவது போல். அடிகளார்சேவையால் பயனடைந்த மக்கள் அவரை ''ஐயாவென ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே' என்று அஞ்சலி செய்வோமாக.

## அதிபர் லோங்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

டத்தில் ஐந்து வருடம் தொடர் வெற்றியும் சம்பத்தரிசியார் கல்லூரியின் சாதனைகளாம் அமைந்தன. அகில இலங்கையிலும் சம்பத்தரிசியார் கல்லூரியின் புகழ் பரவலாயிற்று. லோங் அடிகள் நாட்டின் ஏனைய பகுதியிலிருந்து விளையாட்டு வீரர்களை வரவழைத்துப் போட்டிகளை நடாத்தி, விளையாட்டுத் துறைக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் கொடுத்துப் பல சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கி, அவர்கள் மூலம் கல்லூரியின் புகழை மேலும் அதிகரிக்கச் செய்தார்.

சம்பத்தரிசியார் கல்லூரியின் நூற்றாண்டு 1950இல் கொண்டாடப்பட்டதும், அதுவரை இருந்த விளையாட்டு மைதான வசதி தடைபட்டுப் போயிற்று. எனவே, 20 ஏக்கர் குளமும் நெல் வயலும் ஒன்றிணைந்த காணியை லோங் அடிகளார் விளையாட்டு மைதானமாய் மாற்றி அமைக்கும் பணியில் ஈடுபட்டார். நெல் வயலும் குளங்களும் இருந்த இடத்தில் பிரமாண்டமான விளையாட்டுமைதானம் அமைக்கும் மிகச் சிரமமான பணியில் ஈடுபட்டபோதே தான் அவரது பணி வேறு நாட்டிற்குத் தேவை என்று அறிவிக்கப்பட்டது. அதையும் நன் மனதுடன் ஏற்றுக் கொண்டு தம்அன்புப்பணியை அவுஸ்திரேலிய மக்களுக்கு ஆற்றுவதற்கென்று எமக்குத் தம் ஆசீர்கூறிவிடைபெற்றேகினார்.

## வண. லோங்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மாலான உதவிகளை அவர்களுக்குச் செய்ய மிக ஆர்வத்துடன் இருந்தார். தமக்குக் கடிதம் அனுப்பும் எவருக்கும் தாமதமின்றி அன்புடன் பதில் எழுதி அனுப்பினார். அவரது பழைய மாணவர்கள் சிலர் அவருடைய கடிதங்களை மிக்க

## காங்கேசன்துறை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பதால் புதிய இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்றை அமைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

யாழ் கட்டிடத் திணைக்கள பொறியியலாளரும், மற்றும் தபால் பகுதி அதிகாரிகளும் அண்மையில் இங்கு வந்து கட்டிடத்தின் அமைப்பு, மதிப்பீடுகளை மேற்கொண்டனர்.

இக்கட்டிடத்தைத் துரித கதியில் கட்டிமுடிக்கவேண்டிய ஏற்பாடுகளை வடமாகாண தபால் அத்தியட்சகர் திரு. எஸ். எம். சேதுகாவலர் மேற்கொண்டுள்ளார். (86)

## லோங் அடிகளார்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

லூரியை இலங்கையிலேயே மிகப் பெரிய கல்லூரியாகத் திகழ வைப்பதற்காக பாரிய திட்டங்களை வகுத்துக்கொண்டிருக்கும்போது லோங் அடிகளாருக்கு திடீர் மாற்றலாகும் உத்தரவு கிடைத்தது. அவுஸ்திரேலியா சென்றார்.

செயல் வீரரான லோங் அடிகளார் அவுஸ்திரேலியாவிலும் தனது சொந்த முயற்சியால் 'அயோனா' (Iona) என்னும் கல்லூரியை நிர்ணயித்து உலகப் பிரசித்தி பெறச்செய்தார். தான் ஒரு 'மதகுரு' என்பதை எந்தச் சந்தர்ப்பத்திலும் மறவாத இந்த தியாகச் சுடர் ஈற்றில் 1961-ம் ஆண்டு சித்திரை மாதம் 30-ம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

நாடு எனக்கு என்ன செய்தது என்று கேட்பதை தவிட நாட்டுக்கு நான் என்ன செய்தேன்'' என்ற தத்துவத்தின் அடிப்படையில் லோங் அடிகளார் ஒரு செயல் வீரனாகவே வாழ்ந்தார்.

அக்கறையுடன் பாதுகாத்து வருகின்றனர்.


# ஓராண்டு நினைவஞ்சலி



வீரமரணம்

22 - 05 - 1989



**இளம்புலி வள்ளுவன்**
(த. இரதிநாதன் கரவெட்டி)
வீரஜனனம்: 1964-03-08

**இளம்புலி அருள். பீ. பீ.**
(வி. ஜீவஅருள்தாஸ் கரவெட்டி)
வீரஜனனம்: 1977-08-18

உங்கள் குருதிதான்
நம் பூமியின் விடியலுக்கு
ஓர் உதாரணமாக அமையுமென்றால்
நம் குருதியும் போட்டியிடட்டும் - ஆம்
உதயத்திற்காய் இங்கே
மரணத்திலேயே வாழ்கின்றோம்
நம் வாழ்வே
மரணமரத்தின் கீழுள்ளபோது
மரணம் மட்டும் நம்மை
என்ன செய்துவிடும்.

(சி 3888)

**நண்பர்கள்.**

# இங்குள்ள மது விற்பனை நிலையங்கள் வெளிநாடுகளில் உள்ளவற்றைப்போல் அமைக்கப்பட வேண்டும் - அருண் மாஸ்டர்

(காங்கேசன்துறை)

''எமது மத்தியில் உள்ள மது விற்பனை நிலையங்கள் சமுதாயச் சீரழிவை உருவாக்கும் நிலையங்களாக இருக்காமல், நவீன முறையில் அவை அமைக்கப்படவேண்டும்.

வெளிநாடுகளில் உள்ள மது விற்பனை நிலையங்கள் போன்று எமது பகுதியிலுள்ள மது விற்பனை நிலையங்களும் அமைக்கப்பட்டால், மதுவே கதி என அலையும் கூட்டத்தினரைக் கட்டுப்படுத்தமுடியும்.''

தெல்லிப்பழை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெற்றபோது அதில் உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கோண்டாவில் அலுவலகப் பொறுப்பாளர் அருண் மாஸ்டர் இவ்வாறு கூறினுர்.

திரு.க.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''எமது மத்தியில் உள்ள மது விற்பனை நிலையங்கள் மிகவும் கீழ் நிலையிலுள்ளன. அவற்றின் நடைமுறைகள் சமுதாயத்தின் சீரழிவுக்கு இடமளிக்கின்றன. அந்த விற்பனை நிலையங்களைச் சுற்றி ஒரு கூட்டம் அலைந்து திரியும் நிலையைக் காண்கின்ருேம்.

''நவீன முறையில் இந்த விற்பனை நிலையங்களை அமைத்து நாகரிகமான முறையில் மது விற்பனையை மேற்கொள்வதற்கு தெங்கு,பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் முன்வரவேண்டும்.

ஊழல், துஷ்பிரயோகம் என்பவற்றிற்கு இடம் அளிக்காமல் எமது பிரதேச மூலவளத்தை அபிவிருத்திசெய்ய இச் சங்கங்கள் முன்வர வேண்டும்.

''தொழிலாளர், பாவனையாளர்கள் நலன்கள் பேணப்படவேண்டும். மதுவகைப் பொருட்கள் போதைக்கானவை என்ற நிலைப்பாட்டை மாற்றி அமைக்கவேண்டும். அவை எமது போஷாக்குக்கு வழிசமைக்கின்றன என்ற நிலையில் உபயோக்கப்படவேண்டும்என்ருர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கூட்டுறவு பொறுப்பாளர் திரு.குணராஜா பேசுகையில் கூறியதாவது:

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைவிட தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆசியாவிலேயே முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. பிரதேச மூலவளத்தை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தியாளர்களே நேரடியாகத் திட்டமிட்டுச் செயற்படுத்தும் அமைப்பாக இச்சங்கங்கள் விளங்குகின்றன. இச்சங்கங்களில் நிலவும் நிர்வாகச் சீர்கேடுகளைக் களைந்து சீராக இயங்கச் செய்ய நாம் ஆவன செய்யவேண்டும்.

வீடுகளில் சட்டவிரோதமாகக் கள், மது வகை விற்பனை செய்வது, கசிப்பு உற்பத்தி செய்வது போன்ற நடவடிக்கைகள் எம்மால் முற்ருகத் தடை செய்யப்பட்டுள்ளன. இவற்றை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ருர்.

கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. ரி. சபாரத்தினம் பேசுகையில் கூறியதாவது;

தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுச் கூட்டுறவுச் சங்கங்கள் மது வகைகளை உற்பத்தி செய்வதை மட்டும் நோக்கமாகக் கொள்ளக் கூடாது. பனையின் மூலம் 801 பொருள்களை உற்பத்திசெய்யலாம் எனக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. ஆகவே எமது பகுதி மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த ஏனைய உற்பத்திப் பொருள்களையும் உற்பத்தி செய்வதில் சங்கங்கள் கவனம் செலுத்த வேண்டும்.

மற்றும் வடமாகாணத் தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க சமாஜப் பொதுமுகாமையாளர் திரு. கி. சிவநேசன், வலிகாமம் பகுதி உற்பத்திப் பொறுப்பாளர் திரு. கணேஷ் ஆகியோரும் உரையாற்றினர்.

(86)

## புலிகளை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பேச்சு வார்த்தைகளில் வடக்கு கிழக்கு மாகாணசபை கலைப்பு, அரசியலமைப்பின் 6வது திருத்தச்சட்டம் நீக்கம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடன் அரசாங்கம் நடாத்தும் பேச்சுவார்த்தை ஆகியன விடுதலைப் புலிகளின் சார்பில் முன்வைக்கப்படுமென்றும் இவை பற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி வற்புறுத்துவார்கள் எனவும் அறியவருகிறது.

இப் பேச்சுவார்த்தையில் அரசாங்க தரப்பில் சாதகமான கருத்துக்கள் உடனடியாக முன்வைக்குமாறு விடுதலைப் புலிகள் வற்புறுத்துவார் எனவும் தெரியவருகிறது.

(512)

## ஓய்வூதியக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பரிகாரம் காணுமாறு அதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

இதே வேளையில் சம்பந்தப்பட்ட அரசாங்கத்துறை நிறுவனங்கள் ஒய்வு பெற்ற ஊழியர்களின் சேவை விபரங்களைக் கொடுப்பதில் ஏற்படுத்தும் தாமதமும் இதற்குக் காரணமென்று ஒம்வூதியத் திணைகளம் சுட்டிக்காட்டியிருக்கிறது.

## ரயில்

(1ம் பக்கத் தொடர்ச்சி

சேரவில்லை.

இதேவேளையில் நேற்று காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக்கு ரயில்சேவைகள் நடைபெறவில்லை.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லத்துரை காந்திமதி

யாழ்ப்பாணம் ஐயனுர்கோவிலடியைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை காந்திமதி 1990-05-21-ம் திகதியன்று காலமானுர். அன்னுர் காலஞ்சென்ற தில்லையம்பலம் செல்லத்துரையின் (முன்னுள் ஆசிரியர், பரமேஸ்வராக் கல்லூரி) மனைவியும், திருமதி சோதிலிங்கம் புஷ்பகாந்தி (ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி), திருமதி சிவசிதம்பரம் கமலாதேவி (சமூக சேவைப் பிரதிப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்), செல்வி விமலாதேவி (நீர்ப்பாசனத் திணைக்கள முன்னுள் உத்தியோகத்தர்), செல்வி இராசராசேஸ்வரி (S. C. F, யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற நித்தியானந்தன் (பிரதம பொறியியலாளர், மகாவலி அபிவிருத்திச்சபை) ஆகியோரின் தாயாரும், திரு. திருச்சிற்றம்பலம் (ஓய்வு பெற்ற நீர்ப்பாசனப் பணிப்பாளர்), திருமதி இராமநாதன் சிவகாமியம்மா, திருமதி தவராசா மகேஸ்வரி, திருமதி பரமநாதன் நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் திரு. சோதிலிங்கம் (யாழ். கல்வித் திணைக்களம்), காலஞ்சென்ற சிவசிதம்பரம் (பரிஸ்ரர்) ஆகியோரின் மாமியாரும், செல்வன் செந்தூரன் (யாழ். இந்துச் கல்லூரி), செல்வி காயத்திரி (யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னுரின் இறுதிக் கிரியைகள் இன்று (22-5-90) பிற்பகல் 1 00 மணிக்குக் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகின்ருேம்.

தகவல்:

சு. க. சோதிலிங்கம்.

இல: 12, ஐயனுர் கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-3889)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு வைகாசி மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

## திருகோணமலையை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெந்நீர்க்கிணறுகளும்... இந்த மண்ணின் தமிழ்க் கலாசார சின்னங்களாக நிற்பதை அறிதிருந்தும் இந்த மண்ணைச் சிங்கள அரசு தன் சதிவலைக்குள்வீழ்த்தத் திட்டம் தீட்டியிருப்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

இவ்வாறு மூதூர்ப் பிரதேசம், கங்குவேலியில் நடைபெற்ற விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் முக்கியஸ்தரும், கவிஞருமான திரு. மு. வே. யோ. வாஞ்சிநாதன் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்துபேசும்போது கூறியதாவது;

இந்தச் சதிவலையை அறுத்து எமது பாரம்பரிய பூமியை மீட்பதற்காக நாம் அரசுடன் பேசுவோம்...முடியாவிட்டால் போராடுவோம். இந்தப் போராட்டத்தில் எமது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியில் சகல தமிழ்ப்பேசும் மக்களும் இணைந்து போராட முன்வரவேண்டும் என்று அனபுடன் வேண்டுகிறேன்''

நான்கு பக்கங்களில் கங்கை நதியும், நீரோடைகளும் பாய்ந்து கொண்டிருக்கும் இந்தக் கங்குவேலிக் கிராமத்தில் தமிழ்க்குடும்பங்கள் 400 வசிக்கின்றன. மிகவும் சிறிய தொகையாயிருந்தாலும் இந்தக் கிராமத்து மக்களின் வாழ்க்கைத்தரம், நீரோடைகளின் குளிர்மையைப்போன்று சிறப்பானதாக அமைய வில்லையே...ஏன்? என்பதை ஒவ்வொருவரும் நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும்''என்ருர்.

## வடமராட்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களுடன் இணைந்து வடமராட்சி கிழக்குப்பகுதி மக்களும் அப்பிரதேசத்தில் வாடியமைத்து கடற்தொழில் புரிவோரும் வீதியமைக்கும் வேலையை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைவர் திரு கோ. மகேந்திரராசா (மாத்தயா) நேரில் சென்று பார்வையிட்டு வேலைத் திட்டத்தை மேற்கொண்டுள்ளவர்களுடன் கலந்துரையாடினுர்.

நீண்ட காலமாக மேற்படி பகுதிகளை இணைக்கும் வீதி இன்மையால் அப்பகுதிகளில் வாழும் மக்கள் அந்த ஆறு மைல் தூரத்தையும் கால் நடையாகவே கடக்க வேண்டியிருப்பதுடன் வாகனங்களில் செல்வதாயின் மணல் நிறைந்த காட்டுப்பகுதியூடாக உழவு இயந்திரத்தில் மட்டுமே செல்லக் கூடியதாகவுமிருந்து. அத்துடன் அப்பகுதிகளில் கடற்தொழில் புரிவோர் போக்குவரத்திற்கான வீதி இன்மையினுல் மீன்களை கருவாடாக்கி விற்பனை செய்தே வருமானம் தேடினர்.

இப்புதிய வீதியினுல் உடன் மீன்களாகவே விற்பனை செய்து கூடிய வருமானத்தை அவர்கள் தேடக்கூடியதாக இருக்கும். இவை மட்டுமல்லாது முல்லைத்தீவையும் குடாநாட்டையும் குறுகிய தூரத்துடன் இணைக்கும் கரையோர பாதையால் மேற்படி ஆறு மைல் வீதி இன்மையால் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாதிருந்தது.

தற்போது அமைக்கப்பட்டு வரும் புதிய வீதியால் வன்னிப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை குடாநாட்டிற்கும் குடா நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை வன்னிப் பகுதிகளிற்கும் விரைவாக எடுத்து செல்லக்கூடியதாக இருக்கும். மறுமலர்ச்சிக் கழகத்தால் அமைக்கப்படும் இப்புதிய வீதியானது தமிழ்ப் பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிகோலும் வழியாகவே உள்ளது.

## இன்று

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காலை 7-30-க்கு, பொது நூல்நிலையத்திலிருந்து புனித பத்திரிசியார் கல்லூரிக்கு ஊர்வலமாகச் செல்லுதல்.

காலை 9-00-க்கு, கல்லூரியிலுள்ள 'மதுரம்' திடலில் முத்திரை வெளியீடு, வட மாகாண தபால்சேவை அத்தியட்சர் திரு. எஸ். எம். சேதுகாவலர் கலந்து கொள்கிருர்.

காலை 9-15-க்கு, பிரதம விருந்தினரான, யாழ். ஆயர் கலாநிதி தியோகுப்பிள்ளை ஆண்டகையிடம் முதல் முத்திரையும் முதல் உறையும் கையளிக்கப்படும்.

காலை 10-00-மணிக்கு ஞாபகார்த்த சஞ்சிகை வெளியீடும் கலாசார நிகழ்ச்சியும் நடைபெறும்.

பிற்பகல் 4-30-க்கு, நல்லூர் நாவலர் மண்டபத்தில் பொதுக் கூட்டம் நடைபெறும். இதற்கு யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். (வி)

(சிறப்பு மலர் உள்ளே)

## வடக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வேண்டுகோளுக்கிணங்க, அரச தனியார் ஸ்தாபனங்கள் அனைத்தும் பூட்டப்பட்டு, வாகன ஓட்டமோ, மக்கள் நடமாட்டமோ எதுவுமின்றி தமிழ்ப் பகுதிகள் அனைத்தும் வெறிச்சோடிக்கிடந்தன.

அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த அனைத்தும் செயலிழந்த நிலையில் காணப்பட்டன. பஸ்சேவைகளோ, ரயில் சேவைகளோ இடம்பெறவில்லை.

ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, கொடிகாமம், பருத்தித்துறை, காங்கேசன்துறை, சுன்னுகம், பளை, கிளிநொச்சி போன்ற இடங்களில் மலையக மக்களுக்கு ஆதரவாக பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னுர் ஆகிய இடங்களிலும் எவ்வித அசம்பாவிதமுமின்றி பூரண ஹர்த்தால் இடம்பெற்றது.

### மானிப்பாயில்

நவாலி, ஆனைக்கோட்டை, மானிப்பாய் பகுதிகளிலும் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இப்பகுதிகளிலுள்ள வர்த்தக ஸ்தாபனங்கள், பாடசாலைகள், அரச திணைக்களங்கள் யாவும் மூடப்பட்டுக் காணப்பட்டன.

### கிளிநொச்சியில்

கிளிநொச்சி மாவட்டத்திலும் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. பூநகரி உட்படக் கிளிநொச்சி நகரமும் நேற்றுச் செயல் இழந்திருந்தது.

## அதிசயக் குழந்தை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உலகத் தலைவர்கள் பிரமுகர்கள், கல்விமான்களின் பெயர்கள் வேண்டுமா? எது வேண்டுமானுலும் இக் குழந்தையிடம் கேட்கலாம். பௌத்த மதத்தின் ஐந்து கோட்பாடுகளைக் கூட இக் குழந்தை அப்படியே சொல்லிவிடுகிறது-

''அதிசயச் சிறுவன்'' என்று அழைக்கப்படும் சுயான்சியா என்ற இக் குழந்தை ஏனைய குழந்தைகளிலும் வித்தியாசமானவன். தந்தை கேட்கும் கேள்விகளுக்கு பதில் கூறும் வேகம் அனைவரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்துவிட்டது; (அ)

## நிதர்சனம்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

இரத்தினதுரை 'ஈழநாடு'வுக்கு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

எமது தாயக மண்ணின் கலைஞர்கள் அனைவரும் நிதர்சன பொறுப்பாளர்களுடன் இணைந்து பங்காற்ற முன்வர வேண்டும். தமிழீழ விடுதலை புலிகள் ஒரு பதிப்பகத்தையும்ஆரம்பித்துள்ளார்கள்.

சமகாலப் பிரச்சனைகளையும் எமது தேசிய விடுதலைப் போராட்டம் சம்பந்தமான வரலாறுகள் வெளிவருவதற்குச் சகலஉதவிகளும் வழங்கப்படவிருக்கிறது என்ருர்.

## 26.000

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாது.''

இவ்வாறு அண்மையில் திருகோணமலை மாவட்டம், திருக்கடலூர் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்ற விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கூட்டத்தில் பேசுகையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலதிபர் திரு. யோகரட்ணம் யோகி கூறினுர்.

அவர் மேலும் பேசும்போது கூறியதாவது:

''உலகத்திலே விடுதலைப் புலிகள் இயக்கமானது, ஒரு சிறந்த கரந்தடிப் படையணி (கெரில்லா) என்ற பெருமையுடன் திகழ்ந்துகொண்டிருக்கிறதென்ருல், அதற்கு முக்கிய காரணம் எமது இயக்கத்திற்காகத் தன்னுயிர்களை அர்ப்பணித்த 1,500 வேங்கைகள் மட்டுமல்ல! எமது தலைவர் திரு. பிரபாகரனின் சிறந்த வழிகாட்டலும், திறமையுமாகும்.

''நான்கு பக்கமும் சிங்களவர் சூழ்ந்திருக்க, நடுவில் ஒரு தமிழ்க் கிராமமாகத் தலைநிமிர்ந்து நின்றுகொண்டிருக்கும் திருக்கடலூரானது, காலத்திற்குக் காலம் ஏற்பட்டுவரும் இனக்கலவரங்களிலெல்லாம் பல தமிழ்மக்களின் உயிர்கள் பலியிடப்பட்டிருக்கின்றன. அப்படியிருந்தும், இந்தக் கிராமத்து மக்கள் இங்கே மிகவும் துணிச்சலுடன் புலிக்கொடியைப் பறக்கவிட்டிருப்பதையும் இம் மக்களின் திடமனத்தையும் கண்டு பெருமைப்படுகிறேன்'' என்ருர்.